மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

O.S.No.88/2009

வாக்குமூலம்: பி.வா.சா.1 – <u>சண்முகசுந்தரம்</u>

<u>21.08.2025:</u>

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் இந்த வழக்கில் 2 ஆம் பிரதிவாதி. 1 ஆம் பிரதிவாதி எனது உறவினர் அவருக்கும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் 1 ஆம் பிரதிவாதி சொல்லி தான் தாக்கல் செய்துள்ளேன். சமுதாய மக்கள் வீரமாத்தியம்மள் கோவில் வீட்டின் சர்வே எண்.829/11 க்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீரமாத்தியம்மள் கோவில் விஸ்தீரணம் என்னவென்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி வீரமாத்தியம்மள் கோவில் விஸ்தீரணம் 0.00.19 சதுர மீட்டர் என்றால் சரிதான். கோவில் வீட்டிற்கு வடபுறம், தென்புறம் சர்வே எண்.829/10 பொதுப் பாதை என்று வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோவிலுக்கு வடப்புறம் வாதிக்குச் சொந்தமான சர்வே எண்.829/9 ல் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு தெற்கு பார்த்து தலைவாசல் உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கு தென்புறமுள்ள சர்வே எண்.829/10 பொதுப் பாதை உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கும் வாதி வீட்டிற்கும் இடையில் பொதுப் பாதை உள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு தெற்கு பார்த்து கிழபுறமும், மேல்புறமும் தலைவாசல் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.829/10 ல் உள்ள பொதுப்பாதையை சுவர் வைத்து கேட் வைத்து வாதிகள் சென்று வருவதை நான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் இல்லை. பொதுப் பாதை சர்வே எண்.829/10 தான் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்கள் ஞாபகமில்லையா என்றால் இல்லை, சர்வே எண் மட்டும் தான் ஞாபகமில்லை. கோவில் முன்புறமுள்ள அரசு புறம்போக்கு நிலத்திற்கு 1 ஆம் பிரதிவாதி பட்டா பெற்றுள்ளார் என்றால் சரிதான் . மேற்படி 1 ஆம் பிரதிவாதி பெற்ற பட்டாவை ரத்து செய்யக்கோரி வாதி மனு செய்துள்ளார் என்றால் சரிதான். வாதியும் நானும் சேர்ந்து மாண்பதை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராண்மை மனு தாக்கல் செய்யப்பட்டதில் மேற்படி மனுவில் சர்வே எண்.829/10, சர்வே எண்.829/58 க்கு ஆகிய நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றக் கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் பேரில் பாலசமுத்திரம், பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்கள் சர்வே எண்.829/58 ல் உள்ள ஆக்கிரமிப்புக்கு பதிலாக அதிலிருந்த கழிவறையை மட்டும் அகற்றியுள்ளர் என்றால் சரிதான். சர்வே எண்.829/10, சர்வே எண்.829/58 ம் அரசாங்கம் புறம்போக்கு நிலம் என்பதால் தான் மேற்படி அகற்றினார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.829/11 கோவில் வீடு யார் பெயரில் உள்ளது என்றால்

வீரப்பச்செட்டியார் அவர்கள் பெயரில் உள்ளது. மேற்படி கோவில் வீட்டிற்கு வீரப்பச்செட்டியார் வரி எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவில் வீடு மட்டும் தான் வீரப்பச்செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், வீட்டிற்கு முன்புறம் உள்ள பாதை பொதுப்பாதை என்றாலும் சரியல்ல. சர்வே எண்.829/10 பாதை கோவிலுக்கு பாத்தியப்பட்டது. அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் சர்வே எண்.829/10 கோவில் நிலம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. 19.12.2014 ஆம் ஆண்டு ந 89 த்தம் சர்வே எண்.829/11 எங்களது சமுதாய கோவில் முன்பு வீடு கட்டி குடியிருந்து வந்து காலி செய்ய மறுக்கிறார் என்றும் அந்த இடம் அரசு நிலம் என்பதால் அதை காலி செய்யச் சொல்லி வட்டாட்சியரிடம் மனு செய்தேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே சர்வே எண்.829/10 ல் பொதுப் பாதையில் கோவில் வைத்து வாதி நடந்து வருவதை வழி மறித்து வேண்டுமென்றே இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றாலும், அதனால் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.